DOTன் முடிவு பொறுப்பான ஒன்றா?

ITS அதிகாரிகளின் absorption குறித்து செப் 22 முதல் தொடர் வழிகாட்டுதல்களை DOT வெளியிட்டு பிரச்சனையை முடிவிற்கு கொணர முனைந்துள்ளது. நவ 8 இறுதி கெடுநாள்.

கார்ப்பரேஷன் ஆனவுடன் முதலில் ஊழியர்கள் (Gr D&C) ஆப்ஷன் தந்தனர். GrB-Executives தங்களது பதவி உயர்வு மேம்பாடு தெரிந்தால்தான் வருவோம் என சொல்லி 3 ஆண்டுகள் கழித்து ஆப்ஷன் தந்தனர். 10 ஆண்டுகள் ஆன பின்னரும் ITS அதிகாரிகள் ஆப்ஷன் தர முன்வரவில்லை. 2005ல் நெருக்கடி வந்தபோது அவர்கள் தெரிவித்த pro rata pension பிரச்சனை தீர்க்கப்பட்டது. ஆனால் (1-10-2000 லிருந்து இல்லாமல்) இன்றைய தேதியிலிருந்து ஆப்ஷன் என்பதை அரசு ஏற்கவில்லை. ITS அதிகாரிகளால் அப்பிரச்சனையை தீர்க்கவும் முடியவில்லை. பெரும்பான்மை அதிகாரிகள் அரசாங்க சேவையில் நீடிக்கவே விரும்புகின்றனர்.

Gr B-Executives உள்நுழைந்த பின்னர் ITS அதிகாரிகளின் absorption பிரச்சனை தொழிற்சங்கங்களின் தீவிர கோரிக்கையாக மாறியது. BSNL Efficiency உடன் இக்கோரிக்கை சேர்த்துப் பார்க்கப்பட்டது.

கடந்த 10 ஆண்டுகளில் ITSக்கு இணையான அதிகாரிகளை (MT) தனக்கென தேர்வு செய்ய BSNL உயர் நிர்வாகம் தவறிவிட்டது. தொழிற்சங்கங்களின் கோரிக்கை வலுப்பெறும்போது மட்டும் இப்பிரச்சனை குறித்து ஏதாவது உறுதிமொழி தருவது வாடிக்கையாகி வந்தது. தற்போது 'புலி வருது' கதையாகிவிட்டது.

நவ8க்குப் பின்னர் BSNLக்கு விருப்பம் தெரிவிக்காத அதிகாரிகள் தங்களது அரசாங்க சேவை தொடர டெல்லியில் முகாமிட வேண்டும். DOTன் தேவை போக மற்றவர் உபரி செல்லிற்கு அனுப்பப்படலாம். BSNLக்கு வரவிரும்புபவர்கள் தங்களது அரசுப்பணியை ராஜினாமா செய்துவிட்டு புதிதாக வேலைக்கு சேர்பவர்கள் போல BSNLல் ஜூனியராக வரலாம் என்கிறது DOT/BSNL.

ITS போனபின்னர் தாங்கள் அவ்விடங்களுக்கு நியமிக்கப்பட்டால் சேவையை மிக பொறுப்புடன் - திறமையுடன் தூக்கி நிறுத்த Executives சங்கங்கள் வாய்ப்பு கேட்டுள்ளன. Non-Executive சங்கங்கள் மாற்று

ஏற்பாடுகள் குறித்து எக்கருத்தையும் வெளிப்படையாக தெரிவிக்கவில்லை. அவர்களுக்கு அப்பதவிகளில் இயல்பாகவே claim இருக்கமுடியாது என்பது கூட காரணமாக இருக்கலாம். ITS வெளியேற்றம் தங்களின் கோரிக்கைக்கான வெற்றி என்பதுடன் திருப்தி அடையலாம்.

ITS அதிகாரிகள் ஏன் இவ்வளவு பிடிவாதமாக தாங்கள் இருக்கின்றோம் என்பதை வெளிப்படையாக மற்றவர்களுக்கு எடுத்து சொல்ல தவறிவிட்டனர். தொழிற்சங்கங்களை அழைத்து தங்களது நிலைப்பாட்டினை தெளிவுபடுத்தவும் அவர்கள் தவறினர். தங்களை ஒரு closed Group ஆக கதவடைத்துக் கொண்டு தங்களது வெப்சைட்டில்கூட மற்றவர் நுழையாமல் பார்த்துக்கொண்டனர். இதன்மூலம் isolateஆகிறோம் என்பதைகூட அவர்கள் உணரவில்லை. சாதாரண சகோதர ஊழியர்கள் 1-10-2000 முதல் கார்ப்பரேஷனில் நுழைந்து ரிஸ்க் எடுக்கும் போது, தாங்கள் கடுமையான உழைப்பை செலுத்தி முன்னேற்றிய துறைக்கு வராமல் uncertain நிலைக்கு ரிஸ்க் எடுத்ததை நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை.. BSNL வளர்ச்சிக்கு ஏராள உபதேசங்களை நம்மிடம் செய்த அவர்கள் தங்களுக்கு பிரச்சனை என்றவுடன் அப்படியே ’கைஉதறிவிட்டு செல்ல’ தயங்காமல் முடிவெடுப்பது மனசாட்சியை மூடுவதற்கு ஒப்பாகிவிட்டது.

போட்டியுள்ள சூழலில் நம்மிடம் இருந்து வந்த ITS போன்ற திறமைகளை இழப்பது ஆரோக்கியமாக இருக்குமா என்பதும் நாம் பரிசீலிக்க வேண்டிய ஒன்று. BSNLன் contingency planல் பல குறைகளை சுட்டிக்காட்டிய DOT அதுபற்றி கவலைப் படாமல் தனது வழிகாட்டல்களை துரிதப்படுத்த துவங்கியிருப்பது BSNLக்கு மேலும் சோதனையாகவே அமையும். தனியார்கள் உயர் பொறுப்பில் மிகச் சிறந்த திறமைசாலிகளை பயன்படுத்திவரும் சூழலில் மாற்று குறித்த தெளிவில்லாமல் கைவசம் இருக்கும் திறமைசாலிகளையும் கவலை கொள்ளாமல் அனுப்புவது பொறுப்பான செயலாகபடவில்லை.

6-11-2011